# மனம், மதி (1)

'மனமே நலமா?' என்று
மதி கேட்டது பல நாள் கழித்து;

மயங்கிப் போயிருந்த மனம்
சோர்வாய் விழித்துப் பார்த்தது;

'ம்ம்,' ஏதோ இருக்கிறேன்' என்றது;

'ஏன் இப்படி அலுத்துக் கொள்கிறாய்?'
என்றது மதி;

மனம் சொன்னது:
'அவ்வப் போதாவது கேட்கத் தோன்றுகிறதே,
எப்படி இருக்கிறாய் என்று';

'முந்திக் கொண்டு எப்போதும் வந்து நீ
முகத்திரையாய் மூடிக் கொண்டால்
மூச்சு நான் விடுவதெப்படி?
பேச்சு என்று நாலு வார்த்தை
நான் பேசுவதுதான் எப்படி?';

'சும்மாவா சொன்னார்கள்
உண்மை மனம் என்று என்னை?'
புலம்பிய மனம் பெருமூச்சு விட்டது;

'சரி, என்னை விடு, என் புலம்பல் விடு,
எப்போதும் பளபளப்பாய் இருக்கிறயே
மதியே, நீ நலமா?'
என்று கேட்டது மனம்;

சற்றே யோசித்தது மதி,
சின்னதாய் ஒரு புன்னகை செய்தது,
ஆழமாய் ஒரு பெருமூச்சு விட்டது;
'அப்புறமாய் நிதானமாய்ப் பேசுவோம்'
என்று சொல்லி
அடுத்த வேலைக்கு ஆயத்தமானது...

அ. சொ
பிரிட்டிஷ் ஏர்வேஸ், ப்ளைட் பிஏ 119
ஜூன் 2007.